LEGION OF MARY

**Chennai Senatus**

Ist&2nd Davidson Street, Chennai – 600 001.

E.Mail: senatuschennai@gmail.com



****************************************************************************************************

## பொன்விழா ஆண்டு வாழ்த்துப்பா

**"வைகறைப்போல் தோற்றம்; திங்களைப் போல் அழகு;**
**ஞாயிறு போல் ஒளி; போரணி போல் வியப்பார்வம்; யாரிவள்" (இ.பா.6:10).**

பொன்விழா காணும் மரியாயின் சேனை
பரம்பொருளை உலகிற்கு ஈந்த அன்னையின் படை
போர்க்கருவிகளை தன்னகத்தே கொண்டு
உலகத்தை ஈடேற்ற வந்த மேன்மக்களின் படை

அன்னையின் தூய்மை சேனையின் தூய்மை
அன்னையின் தாய்மை சேனையின் மேன்மை
அன்னையின் தாழ்மை சேனையின் புனிதம்
அன்னையின் பரிவு சேனையின் வெற்றி

சேனை மக்களின் விசுவாசம்
ஜில்லென்றிருக்கும் வைரம் போன்றது
சேனையரின் உறுதியான தீர்மானம்
குளிர்ச்சியான உறைபனி போன்றது

சேனை புரியும் பணிகள் பலவாயினும்
இவ்வுலகம் சார்ந்ததல்ல என்றுணர்ந்து
தாழ்மையே முதல் படி என்று எண்பித்து
சரணடைந்து வெற்றி பெறுவோம்

என் இரக்கம் என்றும் உனக்கென
எண்பித்து காட்டியவர் நம் உன்னதர்
என் அன்னையின் வழி செல்லும் மக்களென
என்றென்றும் நமக்கு நிறைவாழ்வளிப்பவர்

நம்முடன் இருக்க பல பொன்விழாக்களை நோக்கி அடியெடுக்க சேனையினை வளர்த்தெடுப்போம்; தாழ்ச்சியுடன் பணி செய்வோம்; அன்னையை பின்பற்றி என உறுதியெடுத்து **"என் அரசியே என் தாயே நான் முழுவதும் உமக்குச் சொந்தம், என்னிடம் உள்ளது எல்லாம் உமக்கே சொந்தம்"** என்று கூறி நாம் வீறு நடை போடுவோம்.

மரியே வாழ்க!

சென்னை செனாத்துஸ்.

LEGION OF MARY

# Chennai Senatus

Ist&2nd Davidson Street, Chennai – 600 001.

E.Mail: senatuschennai@gmail.com



**************************************************************************************

அன்புள்ள சகோ.கா.மெரின்டோ பெர்னான்டோ, அரக்கோணம், நித்திய சகாயமாதா கியூரியா தலைவர் அவர்களுக்கு,

அன்னை மாமரியின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துகள்.

தங்கள் கியூரியா பொன்விழா கொண்டாடுவதை குறித்து மிக்க மகிழ்ச்சி!

கடந்த 50 ஆண்டுகளாக இந்த கியூரியாவை வழிநடத்திய ஆன்ம இயக்குநர்கள், அலுவலர்கள், சேனையாளர்கள் அனைவரையும் நன்றியோடு நினைத்துப் பார்ப்போம். அவர்களுடைய உயரிய ஆலோசனைகள், வழிகாட்டுதல்கள் மூலமாகவும், அவர்களின் தன்னலமற்ற சேவைகள் மூலமாகவும் இன்று இந்த விழாவினை கொண்டாடும் வாய்ப்பைப் பெற்றுள்ளோம்.

சேனை உறுப்பினர்கள் புனிதம் என்னும் ஒரு சிறந்த குறிக்கோளோடு மரியாயின் சேனையில் பயணிக்கின்றனர். "சேனை தன் உறுப்பினர்களுக்கு சேவை செய்யும் பயிற்சியை அளிப்பதை விட வாழ்க்கையை ஒழுங்கான முறையில் அமைக்கும் பயிற்சியை மிகுதியாக அளிக்கின்றது." எனவே, சேனையாளர்களின் வாழ்க்கை பிறருக்கு எடுத்துக்காட்டான வாழ்வாகவும் அமைய வேண்டும் என்பதே சேனையின் எதிர்பார்ப்பு.

இந்த பொன்விழா சேனையாளர்கள் தங்களது குறிக்கோளை அடையும் வழியை காண்பிக்கும் விழாவாக அமையட்டும். நமது சேனை அரசி நம்மை இறை இயேசுவிடம் அழைத்துச் செல்லும் வழிகாட்டியாய் இருக்கிறார். "**அவர் சொல்வதையெல்லாம் செய்யுங்கள்**" எனும் அவரது ஆலோசனையின்படி செயலாற்றுவோம். சேனை பிரமாணிக்கத்தை கடைப்பிடிக்க உறுதி ஏற்போம். புனிதத்தை நோக்கி பயணிப்போம்.

அனைவருக்கும் செனாத்துஸ் பேரவையின் பொன்விழா வாழ்த்துகள்!.

**மரியே வாழ்க!**

**M.அல்போன்ஸ்,**
**செனாத்துஸ் தலைவர்.**